1987 நவம்பர் 10]

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 20 (1)-வது விதியின் கீழ், திரு. உ. சுப்பிரமணியன், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இக்கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பட வேண்டும்."

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

5. விதி 111-இன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 111-ஆவது விதியின் கீழ் . . . (கூச்சல்-குழப்பம்)

* * * * * *

** இது ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. இந்த இரண்டு அரசு அலுவல்கள் தவிர ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. இதை முடித்தவுடன் அறையிலே பேசலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 111-ஆவது விதியின்கீழ் ஒரு அறிக்கையைப் படிப்பார்கள். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 111-ன் கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

3-4-1987 அன்று 1987-88 ஆம் ஆண்டு மாநில ஆயத்தீர்வை கோரிக்கை எண் 2-ன் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் அளிக்கையில் என்னால் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டது:

"1987-88 ஆம் ஆண்டு நிதியாண்டிற்குத் தேவையான பணத்தை அதாவது 100 கோடி ரூபாயை சராசரியாக கடனாகக் கொடுங்கள் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டதற்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இதுவரையில் பதில் இல்லை. மதுவிலக்கு அமல்படுத்தப்படு கின்றபோது நஷ்டஈடு தருகிறோம் என்று சொல்லி 1977-78 ஆம் ஆண்டை அடிப்படையாக வைத்து தருகிறோம் என்று மத்திய அரசு சொல்கிறது.

(திரு. அ. மலர்மன்னன் தன் இருக்கையின் மேல் நின்று கொண்டு கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மலர்மன்னன் இது முறையல்ல. ஒவ்வொன்றிற்கும் முறை இருக்கிறது. (கூச்சல்—குழப்பம்) உங்கள் ஆட்களே சரியில்லை. இவ்வளவு முறை மீறி போய்விட்டார்கள். இப்படி வரம்பு மீறலாமா? மாண்புமிகு அமைச்சர்.

(முற்பகல் 11-20)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: 1977-78-ல் பூரண மதுவிலக்கு அமலில் இருந்த காலம். எனவே அதை அடிப்படையாக எடுத்துக்கொள்ள முடியாது. 1981-82—க்குப் பிறகு 31-12-1986 வரையில், இதுவரையில் தமிழ்நாட்டில் சாராயம் விற்பதனால் ஏற்பட்ட சராசரி வருமானம் எவ்வளவு என்று பார்த்தால் 200 கோடி இருக்கும். இப்படி 200 கோடி என்பதற்கு மேலே கூட போய் 240 கோடி, 250 கோடி என்று வருமானம் வந்தது. எனவே ஒரு 100 கோடியாவது தமிழக அரசிற்குக் கொடுக்கிறோம் என்று மத்திய அரசு முன் வந்தால்தான் இப்போது நாம் மதுவிலக்கினை பகுதியாக அமல்படுத்துவதை உற்சாகப்படுத்துவதாக இருக்கும்.

2. மேற்கண்ட எனது உரை, கீழ்க்குறிப்பிட்டவாறு இருத்தல் வேண்டும் :—

"இப்பொருள் பற்றிய உண்மை நிலை என்னவென்னில், 1977-78 ஆம் ஆண்டின் நிலவரப்படியான ஆயத்தீர்வை வருவாயை அடிப்படையாகக் கொண்டு, 1978-79 முதல் மாநிலங்களுக்கு ஏற்பட்ட ஆயத்தீர்வை இழப்பினில் 50 சதவிகிதம் ஈடு செய்யலாம் என கடந்த 1986 ஆம் வருடம் மார்ச் திங்கள் மைய அரசு தெரிவித்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவு கூற்றின்படியான மாநில அரசின் நேரிடை நெறிமுறைக் கோட்பாட்டின்படி போதை

1987 நவம்பர் 10 [திரு. வி. வி. சுவாமிநாதன்]

தரும் மருந்து பானங்களை 4 வருடங்களுக்குள்ளாக விலக்க வேண்டும் என்ற நிலைக்கேற்ப கடந்த 30—7—1977 அன்று மாநில முதல்வர்கள் மற்றும் ஏனைய அமைச்சர்கள் கலந்து கொண்ட மைய மதுவிலக்கு குழுவில் எட்டப்பெற்ற ஒரு பொதுவான கருத்திற்கிசைய மைய அரசு மேற்கண்டவாறு தெரிவித்தது. மதுவிலக்கினை அமல்படுத்துவதனால் மாநிலங்களுக்கு ஏற்பட்ட ஆயத்தீர்வை இழப்பினை ஈடு செய்ய, 1977—78 ஆம் ஆண்டு அடிப்படை ஆண்டாக எடுத்துக்கொள்ளப்பட்டது. 1977—78 இல் ஆயத்தீர்வை வருவாய் குறைவாக இருந்ததால் அவ்வாண்டினைக் கணக்கில் கொள்ளாது, இவ்வரசு 1984-85-ஐ அடிப்படை ஆண்டாக நிர்ணயித்து ஈட்டுத் தொகை கணக்கிடப்பட வேண்டும் என்று மைய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் இச்சலுகையினைத் துய்க்க குறிப்பிட்ட கால அளவிலான 5 ஆண்டுகளின் அடிப்படை ஆண்டு, முந்தைய பகுதியின் இறுதி ஆண்டாக இருக்கவேண்டும் எனவும், அப்படி செய்தால் ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கான சலுகை அக்கால கட்டத்தில் மதுவிலக்கை புதிதாக அமல்படுத்தும் மாநிலங்களில் ஏற்பட்ட இழப்பினை ஈடு செய்ய ஏதுவாக இருக்கும் என கருத்துக் கொண்டு நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினார்கள். அதற்கு பதிலாக பிரதமர், முதல்வருக்கு எழுதிய பதில் கடிதத்தில் சம்பந்தப்பட்ட துறைக்கு இந்த விஷயத்தை கவனிக்கும்படி கூறியிருப்பதாக பதில் எழுதினார். மேற்கொண்டு இது சம்பந்தமாக, மைய அரசின் நல அமைச்சகம் இப்பொருள் குறித்து அவ்வரசின் பரிசீலனையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளது."

(கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முறையல்ல. (குறுக்கீடு) உறுப்பினர்கள் எல்லோரும் அமருங்கள். உறுப்பினர்கள் யாரும் வரம்பு மீறிப் பேசாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள்தான் சாஃப்ட் ஸ்போக்கன் ஆயிற்றே, வேண்டாம். (குறுக்கீடு) முடித்தவுடன் பேசலாம். என் அறைக்கு வாருங்கள், இங்கே என்னைக் கேட்காதீர்கள், என்னை இங்கே நிற்க வைத்து, இவ்வளவு பேரும் கேட்டால் எப்படி? இது அலுவலகம் சம்பந்தப்பட்டது. அறைக்கு வாருங்கள். விதியைப் பற்றிச் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உங்கள்

கட்சியின் சார்பிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் தான் தள்ளிவிட்டேன் என்று சொன்னேனே, தள்ளியாயிற்று. (கூச்சல்—குழப்பம்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்) "4"

6. அரசினர் சட்டமுன்வடிவு.

தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

இலங்கைப் பிரச்சினை குறித்து—தொடர்ச்சி.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. கு. ரமணி: * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS